**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 02 –ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ஆம் நாள் புதன்கிழமை

**<u>பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 238/2025</u>**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 11/2022</u>**

**<u>CN0R.NO.TNKR11-000041-2022</u>**

தமிழக அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
லாலாப்பேட்டை காவல் நிலையம்,
குற்ற எண்.362/2021
சட்டபிரிவுகள் : 279, 304(A) IPC --- புகார்தாரர்

// எதிர்//

கண்ணன், வயது 40,
த/பெ. கந்தசாமி,
நத்தமேடு, மேலபாளையம் அஞ்சல்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம். --- குற்றம்சாட்டப்பட்டவர்

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 17.04.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC 11/2022,<br>CNR No.TNKR11-000041-2022 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Lalapet P.S.<br>/Vs/<br>Kannan |
| 6. | Date of Occurrence | 26.08.2021 |
| 7. | Date of Complaint | 26.08.2021 |
| 8. | Date of Arrest if any and Remand | 27.08.2021 |
| 9. | Period of remand of the accused | Nill |
| 10. | Date of Release on bail | 27.08.2021 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | Date of Final report | 02.12.2021 | | |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil | | |
| 13. | Date of questioning of the accused U/s. 279, 304(A) IPC 240 of Code of Criminal Procedure | 30.08.2022 | | |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness | Chief | Cross |
| | | PW-1 | 21.01.2025 | 21.01.2025 |
| | | PW-2 | 21.01.2025 | 21.01.2025 |
| | | PW-3 | 18.02.2026 | - |
| | | PW-4 | 11.03.2026 | 11.03.2026 |
| | | PW-5 | 11.03.2026 | 11.03.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil | | |
| 16 | Date of examination of the accused U/s. 313 of the Code | 18.03.2026 | | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil | | |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil | | |
| 19. | Date of Commencement of Trial | 21.01.2025 | | |
| 20. | Date of closure of Trial | 11.03.2026 | | |
| 21. | Date of Sentence or order | 15.04.2026 | | |
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil | | |
| 23. | If any delay, give explanation | No | | |

இவ்வழக்கானது கடந்த 07.02.2022 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 01.04.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகி

எடுத்துரைத்தும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பிரகாஷ்., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 15.04.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும், தீர்ப்புரை

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர், லாலாபேட்டை கா. நி. கு. எண்.362/2021 |
| எதிரியின் பெயர் | கண்ணன், வயது 40,<br>த/பெ. கந்தசாமி,<br>நத்தமேடு, மேலபாளையம் அஞ்சல்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s.279, 304(A) IPC |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s.279, 304(A) IPC |
| எதிரியின் பதில் | குற்றவாளி அல்ல |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி அல்ல |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | திருமதி.S.பெரியமறத்தி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.R.பிரகாஷ் |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 01.04.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 15.04.2026 |

## தீர்ப்புரை

இவ்வழக்கானது லாலாபேட்டை காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173 – இன் கீழ் 26.08.2021 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவு 279, 304(A) ன் கீழான குற்றத்திற்காக குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.11/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் 2021ம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்டதால் காவல்நிலைய எல்லை நிலவரையரை அடிப்படையில்

மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதிமன்ற ROC.No.19/2024/A1, 30.09.2025 என்ற உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்ற சி.சி.எண்.238/2025 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

**இறுதியறிக்கையின் சுருக்கம்:**

கடந்த 26.08.2021 ம் தேதி மாலை 15.30 மணியளவில் சாட்சி –1 செல்வராஜ் என்பவரது மகன் இறந்துபோன சதிஷ்குமார் TN–47–AS–0172 என்ற எண்ணுள்ள Hero Splendor PRO இருசக்கர வாகனத்தில் கரூர் – திருச்சி மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சிந்தலவாடி இந்தியன் பெட்ரோல் பங்குக்கு மேல்புறம் மகாலிங்கம் வாழை தோப்பு அருகே சென்று கொண்டிருந்தவர் அதே ரோட்டில் அதே திசையில் சென்ற TN–47–AJ–9956 என்ற எண்ணுள்ள லாரியை எதிரி கண்ணன் என்பவர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீரென வேகத்தை குறைத்ததால் பின்னால் சென்ற சதிஷ்குமார் லாரியின் பின்பக்கம் மோதி மூக்கு தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC ன் படி தண்டிக்கப்பட வேண்டியவராகிறார் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** லாலாபேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரியின் மீது கு.வி.மு.ச. பிரிவு 190(1)ன் படி வழக்கை கருத்தில் கொண்டு குற்ற சட்டப்பிரிவு 279, 304(A) – இதசவின் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

**3)** எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரியிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவு 279, 304(A) இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**4)** இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 முதல் 14 குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள்

விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 4 முதல் 8 மற்றும் 10 முதல் 13 சாட்சிகள் விசாரிக்காமல் Dispence செய்யப்பட்டுள்ளார்கள். எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5) <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து வெளிபடும் வழக்கு சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு:</u>

**5.1)** அ.சா.5 பாலாஜி என்பவருக்கு வழக்கில் இறந்துபோன சதிஷ்குமார் என்பவரை தெரியும். எதிரியை தெரியும். கடந்த 26.08.2021 அன்று மதியம் 03.00 யிலிருந்து 04.00 மணியளவில் அவரும், சஞ்சீவிராம் என்பவரும் பெட்ரோல் போடுவதற்காக லாலாபேட்டை மேற்கே அமைந்துள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கிக்கிற்கு சென்று திரும்பும்போது கரூர் – திருச்சி ரோட்டில் கிழக்கு நோக்கி ஸ்பௌண்டர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த சதிஷ்குமார் முன்னால் அதே ரோட்டில் ஈச்சர் TN–AJ–9956 என்ற பதிவெண் கொண்ட வண்டியை திடிரென பிரேக் அடித்ததால் பின்னால் வந்த சதிஷ்குமார் ஈச்சர் வண்டி மீது மோதிவிட்டார். சதிஷ்குமாருக்கு தலையில் அடிப்பட்டு சம்பவயிடத்தில் இறந்துவிட்டார். அவரை குளித்தலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சதிஷ்குமாரின் குடும்பத்திற்கு அ.சா.5 தகவல் தெரிவித்தார்.

**5.2)** அ.சா.4 திருமதி.சுகந்தி, காவல் ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 வுடன் பணியில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் திரு.மாரிமுத்து என்பவர் கடந்த 27.08.2021 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.362/2021 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று அதே நாளில் 07.00 மணிக்கு சாட்சிகள் இளங்கோவன், கணேசன் அவர்கள் முன்னிலையில், சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 தயார் செய்தார்.

**5.3)** பின்னர் குளித்தலை அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கில் இருந்த சதிஷ்குமார் பிரேதத்தை பார்வையிட்டு பஞ்சாயத்தார்கள்

முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டார். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே எதிரி ஓட்டி வந்த லாரியை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் இறந்துபோனவரின் இருசக்கர வாகனத்தை ஆய்வுக்கு அனுப்பி வைத்தார். பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். TN–47–AZ–9956 என்ற லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், TN–47–AS–0172 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், புகார் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது 279, 304(A) இ.த.ச வாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) மற்றும் 351(1)(ஆ) இன் படி 18.03.2026 ஆம் தேதி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும், கூறினார்கள்.

7) இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரியின் மீது இதச பிரிவுகள் 279, 304(A) கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

**8) அரசு தரப்பு வாதம்:–**

அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்கள், தனது வாதத்தில், இறந்துபோனவரின் தந்தை புகார்தாரர் இறந்துவிட்டார். அ.சா.1 முதல் அ.சா.3 பார்வை மகசர் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அ.சா.5 மற்றும் அ.சா.6 விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் என்றும், அ.சா.4 புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளதாகவும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு,

தண்டனை வழங்குமாறும் வாதிட்டார்.

**9) எதிரி தரப்பு வாதம்:–**

எதிரி தரப்பு வாதத்தில் அரசு தரப்பில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரி தான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், இறந்துபோன நபருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டி எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**10) தீர்வு.**

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 26.08.2021 ம் தேதி மாலை 15.30 மணியளவில் சாட்சி –1 செல்வராஜ் என்பவரது மகன் இறந்துபோன சதிஷ்குமார் TN–47–AS–0172 என்ற எண்ணுள்ள Hero Splendor PRO இருசக்கர வாகனத்தில் கரூர் – திருச்சி மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சிந்தலவாடி இந்தியன் பெட்ரோல் பங்குக்கு மேல்புறம் மகாலிங்கம் வாழை தோப்பு அருகே சென்று கொண்டிருந்தவர் அதே ரோட்டில் அதே திசையில் சென்ற TN–47–AJ–9956 என்ற எண்ணுள்ள லாரியை எதிரி கண்ணன் என்பவர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீரென வேகத்தை குறைத்ததால் பின்னால் சென்ற சதிஷ்குமார் லாரியின் பின்பக்கம் மோதி மூக்கு தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**11)** அ.சா.ஆ.7 பிரேத பரிசோதனை அறிக்கை மேற்படி அறிக்கை அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி ஆய்வாளர் திருமதி.சுகந்தி என்பவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் Opinion : The deceased would appear to have died of shock and hemorrhage due to injury to vital organs brain and left lung 20 – 21 hours என்று கருத்து வழங்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.7 மேலும் மேற்படி ஆவணத்தில் இறந்துபோனவரின் உடலில் என்னென்ன காயங்கள் எங்கு எங்கு உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இறந்த நபருக்கு அதிக இரத்தத்தின் விளைவாக இறந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

**12)** அ.சா.ஆ.4 பிரேத விசாரணை அறிக்கை அ.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் இறந்துபோன சதிஷ்குமார் என்பவர் வாகனம் விபத்தில் காயம்பட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தபோது இறந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**13)** மேற்படி ஆவணங்களிலிருந்து இவ்வழக்கின் இறந்துபோன நபர் விபத்தின் மூலம் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் விளைவாக இறந்துள்ளார் என்று தெரியவருகிறது. எதிரி தரப்பில் இறந்து போன சதிஷ்குமார் என்பவரின் இறப்பை மறுக்கவில்லை. அதனால் சதிஷ்குமார் விபத்தின் மூலம் ஏற்பட்ட காயத்தின் விளைவாக இறந்துள்ளார் என்று தெரியவருகிறது.

**விபத்திற்கு யார் காரணம் என்பதை பொறுத்து:-**

**14)** புகார் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவை உற்றுநோக்கும் போது கடந்த 26.08.2021-ம் தேதி மதியம் சுமார் 03.30 மணிக்கு புகாரை பெற்று நிலைய குற்ற எண்.362/2021, இ.த.ச பிரிவுகள் 279, 304(A) -ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக உள்ளது. மேற்படி புகாரில், புகார்தாரரின் பின்னால் வந்த TN-47-AS-0172 லாரியின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று இருசக்கர வாகனத்தை கவனிக்காமல் திடீரென வேகத்தை குறைத்ததால் பின்னால் வந்த புகார்தாரரின் மகன் லாரியில் மோதி தலையில் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு நடவடிக்கை எடுக்க கோரி புகார் கொடுத்த சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**15)** அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை மேற்படி ஆவணம் அ.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் கடந்த 03.04.2020 அன்று குற்ற எண்.362/2021 இதச பிரிவு 279, 304(A) ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 09.09.2020 அன்று நீதிபதியால் பெறப்பட்டுள்ளது. ஆனால் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் கூறவில்லை. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அ.சா.1 கொடுத்த புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**16)** அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில், முன்னால் வாகனம் வந்தால் குறுக்கே எதாவது வந்தால் வாகன ஓட்டிகள் வேகத்தை குறைப்பது இயல்பு தான்

என்றால் சரிதான். முன்னால் எதாவது குறுக்கே வந்து வேகத்தை குறைத்தால் ஆஜாக்கிரதையில் வராது என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்திற்கு எதாவது குறுக்கே வந்தால் வேகத்தை குறைக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். பொதுவாக ஒவ்வொரு வாகனத்திற்கும் 10 மீ இடைவெளி விட்டுதான் செல்லவேண்டும் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** அ.சா.5 விபத்தை நேரில் பார்த்த சாட்சி தனது குறுக்கு விசாரணையில், போலிஸ் விசாரணையில் ஈச்சர் லாரியை ஓட்டிவந்தவர் திடிரென்று வேகத்தை குறைத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாகனம் சென்று கொண்டிருக்கும் போது குறுக்கே வாகனம் வந்தாலும் எதிரே வாகனம் வந்தாலும் வேகத்தை குறைக்கவேண்டும் என்றால் சரிதான். முன்னாடி செல்லும் வாகனம் வேகத்தை குறைக்கும் போது பின்னால் வருபவர் கவனமாக வந்தால் விபத்து ஏற்படாது என்றால் சரிதான். முன்னால் செல்லும் வாகனம் திடிரென்று பிரேக் அடித்து வாகனத்தை நிறுத்தினால் பின்னால் வரும் வாகனம் கவனமாக வந்தால் விபத்து ஏற்படாது என்றால் சரிதான். சதிஷ்குமார் கொஞ்சம் கவனமாக வந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** அ.சா.6 விபத்தை நேரில் பார்த்த சாட்சி தனது குறுக்கு விசாரணையில், போலிஸ் விசாரணையில் எதிரி வேகத்தை குறைத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேகத்தை குறைப்பது என்றால் திடிரென்று பிரேக் அடிப்பதற்கு வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். எதிரி வேகத்தைதான் குறைத்தார் என்றால் சரிதான். பொதுவாக செல்லும் வாகனம் குறுக்கே எதாவது வந்தால் வேகத்தை குறைக்கவேண்டும்எ ன்றால் சரிதான். லாரிக்கு பின்னால் வந்தவர் கொஞ்சம் கவனமாக வந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**19)** லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5, அ.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் Rear bumper damaged என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி விபத்து இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பதும் தெரியவருகிறது. ஆனால், மேற்கண்ட சேதாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, சங்கதி விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கிறது.

**20)** இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6, அ.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் 1. Front mudguard damaged 2. Head light visor damaged 3. Front left and right indicators damaged 4. Rear tail lamp damaged 5. Rear left side indicator damaged 6. Front left side and front right side rear view mirrors damaged 7. Rear wheel damaged 8. Speedo meter gauge damaged என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி விபத்து இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பதும் தெரியவருகிறது. ஆனால், மேற்கண்ட சேதாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, சங்கதி விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கிறது.

**21)** அ.சா.1 இளங்கோவன் மற்றும் அ.சா.2 கணேசன் ஆகியோர்கள் பார்வை மகசர் சாட்சி ஆவார்கள். கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பு, தேதி, மாதம் தற்போது ஞாயபகமில்லை. லாலாபேட்டை போலிசார் சிந்தலவாடி பெட்ரோல் பங்க் எதிரே வந்து விபத்து தொடர்பாக விசாரணை செய்து கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகசர் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**22)** அ.சா.ஆ.1 பார்வை மகஜர் அ.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் சம்பவயிடமானது லாலாபேட்டை காவல் நிலையத்திற்கு சுமார் 1.5 கி.மீ கிழக்கில் அமைந்துள்ளது. சம்பவமானது கரூர் – திருச்சி ரோடு சிந்தலவாடி இந்தியன் பெட்ரோல் பங்க் மேல்புறம் மகாலிங்கம் என்பவரது வாழைதோப்பு அருகே அமைந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**23)** அ.சா.ஆ.3 மாதிரி வரைபடம், மேற்படி வரைபடத்தை உற்றுநோக்கும் பொழுது கரூர் to திருச்சி மெயின் ரோடு அருகே சம்பவயிடம் காட்டப்பட்டுள்ளது. மேற்படி, வரைபடத்தில் சம்பவயிடத்தில் உள்ள அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு செல்லாமல் அங்குள்ள அம்சங்களை குறிப்பிட்டு மேற்படி, ஆவணங்கள் தயார் செய்ய முடியாது. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**24)** அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி, திருமதி.சுகந்தி தனது சாட்சியத்தில், வழக்கு கோப்பினை பெற்று புலன் விசாரணை செய்து எதிரியை கைது செய்து பிணையில் விடுவித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

சம்பவத்தை நேரில் பார்த்த அ.சா.3, அ.சா.5, அ.சா.6 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சிக்கு முன்னால் சென்ற எதிரி வாகனம் வேகத்தை குறைத்ததால் பின்னால் வந்த இறந்துபோன சதிஷ்குமார் எதிரி வாகனத்தின் மீது மோதி இறந்துவிட்டதாகவும், இறந்துபோனவர் கவனமாக வந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றும், குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளதாலும் எதிரி ஓட்டிச் சென்ற வாகனத்தின் பின்புறம் விபத்து ஏற்பட்டுள்ளதால் ஓட்டுனரின் கவனம் முன்புறம் தான் இருக்கும். பின்புறம் இருக்காது என்பதாலும், இந்த விபத்திற்கு எதிரி காரணம் அல்ல என்று முடிவு செய்யப்படுகிறது. எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், எதிரி விடுதலை பெறத்தக்கவர் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக இந்நீதிமன்றம் மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் எதிரி பிரிவுகள் 279, 304(A) IPC ன்படி குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 248(1) மற்றும் பிரிவு 271(1) BNSS–ன்கீழ் மேற்படி குற்றச்சாட்டுக்களிலிருந்து இந்நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. எதிரி காவல்நிலையத்தில் எழுதி கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலம் மற்றும் மேல்முறையீட்டுக்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. அதனால் அது பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 –ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.15 22:39:22 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**பின் இணைப்பு**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | இளங்கோவன் (பார்வை சாட்சி) |
| அ.சா.2 | கணேசன் (பார்வை சாட்சி) |
| அ.சா.3 | அருள்குமார் (சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி) |
| அ.சா.4 | திருமதி.சுகந்தி (புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்) |
| அ.சா.5 | பாலாஜி (விபத்தை நேரில் பார்த்த சாட்சி) |
| அ.சா.6 | சஞ்சிவிராமன் (விபத்தை நேரில் பார்த்த சாட்சி) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.5 | லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.6 | இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | புகார் |

**எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:-இல்லை**

**எதிரி தரப்பில் சான்று பொருட்கள் :- இல்லை**

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:- இல்லை**

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.15 22:39:28 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின்சேர்க்கை:</u>**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
3. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்:</u>**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.